**இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2016**

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்யணிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) நிதி செயலாற்றுகை கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தை தேய்வுச் செலவு ரூபா 1,982,364 தொகை எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அவை ரூபா 1,763,470 தொகை என காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது கட்டிடக் கணக்கில் இருந்து கட்டிடங்கள் பழுதுபார்த்தல் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 1,801,671 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 2,020,565 தொகை என காட்டப்பட்டிருந்ததுடன் அந்த சீராக்கங்கள் செயற்பாட்டு தொழிற்பாடுகளில் மூலமான காசுப்பாய்ச்சலின் காசு அல்லாத மாற்றங்களின் கீழ் காட்டப்பட வேண்டும் எனினும் முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சல் எனக் காட்டப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்ட பெற வேண்டிய பெறுமதிகூட்டிய வரி ரூபா 447,303 இற்கான மீதி பணமாக அல்லாத மாற்றங்களின் கீழ் காட்டப்பட வேண்டும் எனினும் அதனை நிதிச் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய பணப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09**

அறவீடு ஒன்று இன்றி அல்லது பேரளவில் அறவீடு ஒன்றென வினியோகிப்பதற்கான இருப்புக்கள் அவற்றின் கிரயம் மற்றும் தற்போதைய மீளவழங்கள் பெறுமதி அவை இரண்டில் குறைந்த பெறுமதிக்கே மதிப்பிடப்பட வேண்டும் எனினும் பணியகத்தினால் பணம் அறவிடப்படாமல் வினியோகிப்பதற்காக வைத்திருந்த ரூபா 345,252 பெறுமதியான மேம்பாட்டு விடயங்கள் தொடர்பாக அவ் அறிவுரைகளை கடைபிடித்திருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டிற்கான கிடைத்திருந்த நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 54,478 தொகை மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் காட்டப்படல் மற்றும் 2016 ஆண்டிற்கான பெறவேண்டிய வட்டி ரூபா 79,998 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்குகளில் காட்டப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 25,520 தொகை வட்டி வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்ய வேண்டிய மேம்பாட்டு விடயங்கள் இறுதி இருப்பில் இருந்து ரூபா 1,358,488 இற்கு கிரயத்தையுடைய இருப்பு ஒன்று நிதிக்கூற்றுக்களில் உற்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் ரூபா 345,252 தொகை என உட்படுத்தப்பட்டிருந்த இருப்பும் நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆண்டின் போது தவறுதலாக மூலதனப்படுத்தப்பட்டிருந்த கட்டிடங்கள் பழுது பார்த்தல் செலவு ரூபா 1,801,671 தொகையினை சரி செய்யும் போது முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் ஒன்றாக தடுத்து வைத்துள்ள இலாபத்துடன் சீராக்கல் செய்யப்பட வேண்டும் எனினும் அதனை மீளாய்வாண்டிற்கான கட்டிடங்கள் பழுது பார்த்தல் செலவு எனக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்காததுடன் 2014 ஆண்டிற்கான கணக்காய்வு கட்டணமாக செலுத்தியிருந்த ரூபா 198,375 தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றாக கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான இலாபம் அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியக் கணக்கு மற்றும் ஊழியர் சேமலாப நிதியச் செலவுக் கணக்கு ரூபா 58,272 இனால் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் செலவுக் கணக்கு மற்றும் செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியக் கணக்கு ரூபா 11,652 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 5,638,960 தொகை கிரயத்தையுடைய ஆதனங்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடும், கூட்டுத்தொகை ரூபா 8,363,700 தொகைக்கான வர்த்தக மற்றும் மேம்பாட்டு செலவுகள் தொடர்பான பில்பத்திரங்களின் மூலப்பிரதி மற்றும் பணம் பெற்றுக்கொண்டவர்களின் உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

நிதி நிலைமைக் கூற்றில் நீண்டகால முதலீடுகள் என ரூபா 26,648,658 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் வங்கி அறிவித்தல் (Renewal Notice) இன் பிரகாரம் அம் மீதி ரூபா 27,898,647 தொகையாகக் காணப்படாமையால் ரூபா 1,249,989 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கபட்டது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் ரூபா 30,895,865 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,407,006 தொகை ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,488,859 தொகையினால் வளர்ச்சியடைந்திருந்தது. வர்த்தகச் செலவுகள் ரூபா 25,441,814 இனால் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 30,636,495 தொகையினால் அதிகரித்திருந்த மேற்கூறிய நிதி விளைவுகளில் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 21,704,200 தொகைக்கான மிகை தளம்பல் ஏற்பட்டு 2016 ஆண்டின் போது ரூபா 30,895,865 தொகை ஆகியிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டில் ரூபா 29,522,428 தொகைக்கான பணியகத்தின் பங்களிப்பு முரண்களுடன் வளர்ச்சியடைந்து 2016 ஆண்டின் போது ரூபா 44,697,026 தொகை ஆகியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தின் 42(2) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு ஆகும்.

(i) இலங்கை சர்வதேச வலயம் சார் மற்றும் உள்நாட்டு மகாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் நடாத்தும் இடம் ஒன்றாக மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய பிரயாண முடிவெல்லை ஒன்றாக மேம்படுத்தல்.

(ii) சர்வதேச வலயம் சார் மற்றும் உள்நாட்டு மகாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் நடாத்தும் இடம் ஒன்றாக மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய பிரயாண முடிவு எல்லை ஒன்றாக இலங்கையை ஒருங்கிணைந்தலுடனும் ஒத்துழைப்புடனும் அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாத்துறை சந்தையில் இலங்கை தொடர்பாக சந்தைப்படுத்தல் விவகாரங்களை மேற்கொள்வதற்காக பொறுப்பு ஏற்பதற்காக திட்டமிடப்பட்ட பொதுக் கொள்கையொன்றினை ஏற்படுத்துதல்.

(iii) சர்வதேச வலயம் சார் மற்றும் உள்நாட்டு மகாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் தூண்டுதல் அளிக்கும் சிறிய பிரயாணங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அதற்கு உதவி வழங்கல் மற்றும் அரச மற்றும் தனியார் துறையின் மூலமாக அதற்காக சேவைகள் வழங்குதல்.

(iv) மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் வெற்றிகரமாக நடத்துதல் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதை பொறுப்பாக ஏற்பதற்காக இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் கருத்தரங்குகள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலாக்கள் அமைப்புக்களுடன் ஒருங்கிணைதல் மற்றும் ஒத்துழைப்புகளை பேணுதல்.

(v) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலா பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு மற்றும் அமைப்புகளுக்கு தொழில்சார் நியமங்களை தீர்மானித்தல் மற்றும் அந்த நியமங்களை பேணுவதை வலுப்படுத்தல்.

(vi) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலாப் பயணங்கள் தொடர்பாக பல்வேறு துறைகளில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தொகுதிகளில் நபர்களின் அல்லது அமைப்புக்களின் தொழில்சார் திறன்களை அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்.

(vii) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலாப் பயணங்களை அபிவிருத்தி செய்யும் மற்றும் மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிகள் அல்லது அமைப்புக்களுடன் இணைதல், அவற்றில் அங்கத்துவத்தை பெறல் அல்லது அந்த ஏதேனும் சங்கங்கள் அல்லது அமைப்புக்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளல்.

(viii) இலங்கையைப் போலவே வெளிநாடுகளிலும் இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுப் பிரயாண சேரிடம் ஒன்றாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் சந்தைப்படுத்துவதற்கான பணியகத்தில் வழிகாட்டல் வழங்குதல்.

(ix) உபசரிப்பு சேவை உட்பட போதியளவான, ஈர்க்கக்கூடிய மற்றும் செயற்திறனுள்ள சுற்றுலா சேவையை, இடையறாமல் நடத்தக் கூடிய விதமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல்.

(x) பணியகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இடைநேர் அல்லது நன்மை பயக்கக் கூடிய அனைத்து செயற்பாடுகள் மற்றும் விடயங்களை இலங்கையில் அல்லது வேறு இடங்களில் மேற்கொள்ளல்.

நிறுவனத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்கூறிய குறிக்கோள்களில் (ii), (v), (vi), (vii), (viii) மற்றும் (ix) ஆகிய குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை இதுவரை நிறைவேற்றுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 14 முக்கிய செயற்பாடுகளுக்காக ரூபா 212.85 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 104.14 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதாவது 49 சதவீதமாகும்.

(இ) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 2016 ஆண்டின் போது 155 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 97 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 1.2 மில்லியன்களுக்காக மதிப்பீட்டு கிரயமொன்றுடன் உள்நாட்டு சுற்றுலா அமைப்புக்களுடன் செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்த 15 விழிப்புணர்வு செயற்திட்டங்கள் மற்றும் ரூபா 5 மில்லியன் மதிப்பீட்டு ஏற்பாடுகளுடன் வருடம் பூராகவும் செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த மனித வள அபிவிருத்திக்கான 04 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பணியகத்தினால் 2016 அக்தோபர் 31 திகதி முதல் 2016 நவம்பர் 02 திகதி வரை பிரான்ஸின் சுற்றுலா முகவர்களின் தேசிய சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தை இலங்கையில் நடத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 95,000,000 இல் ரூபா 51,000,000 தொகை இலங்கை மாநாட்டுப் பணியகத்தினால் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

மேற்கூறிய கருத்தரங்கு தொடர்பாக கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பங்குபற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 300 தொகை என பிரான்ஸின் சுற்றுலா முகவர் நிலைய தேசிய சங்கத்தின் செயலாளரின் 2016 ஜுன் 06 திகதிய மின் அஞ்சல் மூலம் உறுதிப்படுத்தியிருந்த போதிலும் 2016 செப்தெம்பர் 15 ஆம் திகதிய MTD& CRA/2016/23 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் பங்குபற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 488 தொகை என உட்படுத்தி செலவு மதிப்பீடு சமர்பிக்கப்பட்டிருந்தது. இங்கு உண்மையான வெளிநாட்டவர்கள் 286 பேர்கள் மாத்திரமே பங்குபற்றி இருந்தனர்.

(ஆ) மேற்கூறிய கருத்தரங்கு நடாத்துவதற்காக கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலிருந்து வெவ்வேறாக கூறுவிலைகளை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கத்தில் தலைவரிடம் கூறுவிலை பெறப்பட்டிருந்தது. அந்த கூறுவிலைகள் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் வர்த்தமானியை அடிப்படையாகக் கொண்ட விலை ஒன்றென வெளிப்படுத்தப்பட்டது. 2011 மார்ச் 17 திகதிய 1697/24 ஆம் இலக்கம் கொண்ட வர்த்மானி அறிவித்தலின் பிரகாரம் ஓய்வு/ கூட்டங்கள்/ ஊக்குவிப்பு/ கலந்துரையாடல்கள்/ கண்காட்சிகளுக்காக (MICE) இன்வொயிஸ் விலையிலிருந்து 10 சதவீதம் கழிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு கழிக்கப்படாமையால் 4 ஹோட்டல்களுக்காக ரூபா 740,306 தொகை மிகையாக செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 செப்தெம்பர் 15 திகதிய அமைச்சரவை பத்திரம் தொடர்பான இணைப்பின் பிரகாரம் ஹோட்டல் அறைகளுக்காக வரியுடன் செலுத்துவதற்கு இணங்கியிருந்த தொகை தனியான அறைக்கு 169 அமெரிக்க டொலர்கள் மற்றும் இரட்டை அறைகளுக்காக 180 அமெரிக்க டொலர்கள் எனினும், கொடுப்பனவு உறுதிச் சான்றுகளை பரிசோதனை மேற்கொண்ட போது அமெரிக்க டொலர் 169.78 முதல் 188.93 வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் 04 ஹோட்டல்களுக்காக ரூபா 329,592 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மாநாடுகளை நடாத்தியது தொடர்பாக பிரான்ஸ் சுற்றுலா முகவர்களின் தேசிய சங்கத்திடம் அறவிடப்பட வேண்டிய தொகையிலிருந்து விமானப் பிரயாண கட்டணத்திற்காக ரூபா 4,029,000 தொகை கழிக்கப்பட்டிருந்ததுடன் அதனை குறைப்பதற்கான காரணம் மற்றும் அதனை உறுதிப்படுத்துவதற்கான போதியளவு சான்றுகள் காணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**4.3 நிதியக் குறை பயன்பாடு**

-----------------------------------------

மீளாய்வாண்டின் போது நிதிய முகாமைத்துவக் கணக்கில் ரூபா 110,000,000 இற்கான சராசரி பண மீதியொன்று காணப்பட்ட போதிலும் அதனை நிலையான வைப்புகளில் முதலீடு செய்து உயர்ந்த வட்டி வருமானம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணி நிருவாகம்**

---------------------------------

நிறுவனத்தில் ஆள்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யாத மற்றும் பிழையான தகவல்களை உட்படுத்தி சமர்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பப்பத்திரம் ஒன்றின் அடிப்படையில் பொது முகாமையாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2016 திசெம்பர் முதல் 2017 ஜனவரி வரையில் காலப்பகுதிக்காக சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 483,372 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

------------------------------------------------------------

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

------------------------------------------------------

2003 ஜூன் 03 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுள் நிதிக்கூற்றுக்கள் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2016 இன் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 04 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருந்தமையால் 34 நாட்களுக்கான தாமதமொன்று காணப்பட்டது.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------

2003 ஜூன் 03 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் தேவையின் படி அண்மித்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தந்திரோபாய திட்டமிடல் மீளாய்வு செய்து முகாமைத்துவத்தின் பொறுப்பினை செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் தெளிவாக இனங்காணக்கூடிய விதமாக மற்றும் திட்டமிட்ட காலத்திற்கு ஏற்ப நெருங்கக் கூடியதான எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றும் விதமாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

------------------------------------

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு விடயங்களுக்காக உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.4 பெறுகைகளின் திட்டம்**

----------------------------------

2006 ஜனவரி 25 ஆம் திகதிய அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 21 கணக்கு விடயங்களின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளிடையே 29 சதவீதம் முதல் 433 சதவீதம் வரையான வீச்சின் முரண் ஒன்று அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்பிக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | மேம்பாட்டு இருப்பு தொடர்பான அனைத்து விடயங்களும் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்படாமை. |